## காலைக்கதிர் (16.02.2023)




■ புகழூர் டி.என்.பி.எல்., மெட்ரிக் பள்ளியில், டி.என்.பி.எல்., ஆலை நிர்வாகம் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் நடந்தது.

# டி.என்.பி.எல்., மெட்ரிக் பள்ளியில் இலவச கண் பரிசோதனை முகாம்

கரூர், பிப். 16–

கரூர் மாவட்டம் புகழூர் டி.என்.பி.எல்., மெட்ரிக் பள்ளியில், தமிழ்நாடு செய்திதாள் காகித ஆலை (டி.என்.பி.எல்.,) சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் நடந்தது.

முகாமை, ஆலையின் செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

ஆலையை சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகழூர் ஆகிய பஞ்., பகுதிகளில் வசிப்பவர்கள் கலந்து கொண்டனர்.

பார்வை இழப்பு, பிறவி கண்புரை, கண்ணீர் அழுத்த நோய், கிட்டப் பார்வை, துாரப்பார்வை, கண் எரிச்சல் உள்ளிட்ட குறைபாடுகளுக்கு மருத்துவ குழுவினர் பரிசோதனை செய்து, மருந்து மாத்திரைகள் வழங்கினர். மேலும், 1.25 லட்சம் ரூபாய் மதிப்பில் மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம், ஆராய்ச்சி அபிவிருத்தி) சீனிவாசன், பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் உட்பட பலர் பங்கேற்றனர்.

SM-HR
For each Newspaper, different photos can be shared

GM-HR

For perusal pls.

K S... SM-HR 16/2/23

தினகரன் (16.02.2023)

### புகளூர் டிஎன்பிஎல் காகித ஆலையில்

# 310 பேருக்கு சிறப்பு கண் சிகிச்சை

## மூக்கு கண்ணாடிகளும் வழங்கல்




புகழூர் டிஎன்பிஎல் நிறுவனத்தில் நடந்த இலவச கண் பரிசோதனை முகாமை டிஎன்பிஎல் செயல் இயக்குனர் கிருஷ்ணன், பொதுமேலாளர்கள் சீனிவாசன், கலைச் செல்வன், முதுநிலை மேலாளர் சிவக்குமார், மேலாளர் வெங்கடேசன், மருத்துவ அலுவலர் ராஜா ஆகியோர் துவக்கி வைத்தனர்.

வேலாயுதம்பாளையம், பிப்.16: புகழூர் டிஎன்பிஎல் நிறுவனம் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை, கரூர் மாவட்ட பார்வை இழப்பு சங்கம் ஆகியவை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் டிஎன்பிஎல் பள்ளியில் நடந்தது.

டிஎன்பிஎல் செயல் முகாமை இயக்குனர்(இயக்கம்)கிருஷ்ணன், முதன்மைபொதுமேலாளர்(வனத்தோட்டம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி துறை)சீனிவாசன், பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் சிவக்குமார், மேலாளர் வெங்கடேசன், மருத்துவ அலுவலர் ராஜா மற்றும் மருத்துவ குழுவினர் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர்.

இதில் மருத்துவகுழுவினர் கண்விழித்திரையில் பார்வை இழப்பு, பிறவி கண் புரை, கண் வலி, கண் நீர் அழுத்த நோய், கிட்டப்பார்வை, தூரப்பார்வை உட்பட கண் தொடர்பான நோய்களுக்கு இலவச பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனை வழங்கினர். மேலும் கிட்டப்பார்வை, தூரப்பார்வை,வெள்ளெழுத்து பாதிப்பு உடைய 310 பேர்களுக்கு டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் ரூ.1 லட்சத்து 25ஆயிரம் மதிப்புள்ள மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டது. கண்புரை உள்ள 64 பேர்கள் அறுவை சிகிச்சைக்காக மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

அங்கு அவர்களுக்கு அறுவை சிகிச்சை, உள்விழி லென்ஸ் அறுவை சிகிச்சை, மருந்து, தங்கும் இடம், உணவு ஆகியவற்றை மருத்துவமனையும், அவர்களுக்கு ரூ.20ஆயிரம் மதிப்புள்ள பெட்சீட், பேஸ்ட், சோப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை டிஎன்பிஎல் நிறுவனமும் இலவசமாக வழங்கியது.

## தினமணி (15.02.2023)

# டிஎன்பிஎல் மெட்ரிக் பள்ளியில் இலவச கண் பரிசோதனை முகாம்



காகிதபுரம் டிஎன்பிஎல் மெட்ரிக் பள்ளியில் அண்மையில் நடைபெற்ற இலவச கண் பரிசோதனை முகாமை பார்வையிட்ட ஆலை மேலாளர்கள்.

கரூர், பிப்.14: காகிதபுரம் டிஎன்பிஎல் மெட்ரிக் பள்ளியில் அண்மையில் நடைபெற்ற இலவச கண்பரிசோதனை முகாமில் ஏராளமான பொது மக்கள் பங்கேற்றனர்.

கரூர் மாவட்டம், புகழூர் காகித ஆலை (டிஎன்பிஎல்) மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் ஆலையைச் சுற்றியுள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், ந.புகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு இலவச கண் பரிசோதனை முகாம் டிஎன்பிஎல் மெட்ரிக் பள்ளியில் அண்மையில் நடைபெற்றது.

முகாமை, ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன், முதன்மைப் பொது மேலாளர் (வனத்தோட்டம், ஆராய்ச்சி அபிவிருத்தி) ஆர்.சீனிவாசன், பொதுமேலாளர் (மனிதவளம்) கா.கலைச்செல்வன் மற்றும் மருத்துவக்குழுவினர் முகாமை தொடக்கி வைத்தனர்.

முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு கண் விழித்திரையில் பார்வை இழப்பு, பிறவி கண்புரை, கண்னீர் அழுத்த நோய், கிட்டப்பார்வை, தூரப் பார்வை, வெள்ளெழுத்து, கண் எரிச்சல் உள்ளிட்ட நோய்களுக்கு மருத்துவ குழுவினர் இலவசமாக கண் பரிசோதனை செய்து, மருந்து மாத்திரைகள் வழங்கினர். மேலும் ரூ.1.25 லட்சம் மதிப்பில் மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2021-2023 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 16-2-2023 (வியாழக்கிழமை) 10 பக்கம் ₹ 6 ★ | மலர் 46 இதழ் 63

TRICHY 16-2-2023 (THURSDAY) 10 PAGES ₹6 | VOL: 46 ISSUE: 63



தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இலவச கண் பரிசோதனை முகாமினைத் துவக்கி வைத்து பார்வையிடும் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் மற்றும் அதிகாரிகளை படத்தில் காணலாம்.

### கரூர் அருகே புகழூரில்

## டி.என்.பி.எல். நிறுவனம் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம்

கரூர், பிப்.16

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து கரூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் உதவியுடன் காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, பு.தோட்டக்குறிச்சி பேரூராட்சி, திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம். ந.புகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு உள்ளடங்கிய மக்களுக்காக இலவச கண் சிகிச்சை முகாமினை காகிதபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் மொத்தம் 690 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்த இலவச கண் பரிசோதனை முகாமினை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்வி ஆர். கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் சீனிவாசன் (வனத்தோட்டம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தித்துறை) மற்றும் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

இம்முகாமில் மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கிட்டப்பார்வை. தூரப்பார்வை, வெள்ளெழுத்து உள்ள 310 ஏழை எளிய மக்களுக்கு ரூ.1,25,000- மதிப்பிலான மூக்கு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும், இம்முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இம்முகாமிற்கு கிராம பகுதிகளிலிருந்து கண் குறைபாடு உள்ளவர்களை அழைத்து வர ஆலை நிர்வாகம் ஐந்து வழித்தடங்களில் பேருந்து வசதிகளை ஏற்பாடு செய்திருந்தது.

இம்முகாமில் 64 நபர்களுக்கு கண்புரை உள்ளது என கண்டறியப்பட்டு. முகாம் தினத்தன்றே அறுவை சிகிச்சைக்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தால் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.


இவ்வாறு அறுவை சிகிச்சைக்காக அழைத்துச்செல்லப்பட்ட 64 நபர்களுக்கும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பாக ரூ.20.000 மதிப்பிலான 10 வகையான



தலைவா அருணபிரசாத
வருவாய் கோட்டாட்சியர் மு
அளித்தனர். மனுவின் மீது உ
கோட்டாட்சியர் உறுதி கூறியு

## செவித்திறன் பாதித்த மா

அரியலூர் மாவட்டத்
செவித்திறன் பாதிக்கப்ப
ஆரம்ப கால பயிற்சி மை
20 இளம் சிறார்கள் மற்று
குழந்தைகள், அவர்களது
மைய சிறப்பாசிரியர்களு
செல்லப்பட்டனர். வைத்தீஸ்
கீழ்ப்பள்ளம் ஆகிய சுற்றுலா த
அழைத்து செல்லும் சுற்றுல
கலெக்டர் அலுவலக வளா
ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
வருவாய் கோட்டாட்சியர் ராம
தொடக்கி வைத்தார். மாவ
நல அலுவலர் தட்சணாமூர்
அலுவலர் சரவணன் உள்ளிட



ஆலோசனைக்கூட்டம் நடை

ஜெயங்கொ

## பா.ம.க. சார்பில் ஆ

அரியலூர் மாவட்டம் ெ
மண்டபத்தில் சிதம்பரம் நாட
பாட்டாளி மக்கள் கட்சி
நடைபெற்றது. கூட்டத்திற்கு
காடுவெட்டி ரவி தலைமை
மாநில தேர்தல் பணிக்குழு
பணிக்குழு செயலாளர் ஜெய
தலைவர் சின்னதுரை, பெர
செந்தில், மாநில மாணவரண
ஆளவந்தார், மாவட்ட வன்னி
பிரகாஷ்,

மாவட்ட தேர்தல் பணி
உள்ளிட்ட ஒன்றிய நகர
பணிக்குழு பொறுப்பாளர்
கூட்டத்தில் நிர்வாகிகள் பெ
தேவைகளை பூர்த்தி செய்ய
வேண்டும், நிர்வாகிகள் அ
இருக்க வேண்டும் உள்ளிட்ட
முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**தினமலர் (22.02.2023)**



புகழூர் டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் நடந்த இலவச கண் பரிசோதனை முகாமை டிஎன்பிஎல் செயல் இயக்குனர் கிருஷ்ணன், பொது மேலாளர்கள் சீனிவாசன், கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் சிவக்குமார், மேலாளர் வெங்கடேசன், மருத்துவ அலுவலர் ராஜா ஆகியோர் துவக்கி வைத்தனர்.

# இலவச கண் பரிசோதனை முகாம்

**வேலாயுதம்பாளையம், பிப். 22–**

*புகழூர் டிஎன்பிஎல் நிறுவனம், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை, கரூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் ஆகியவை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் டிஎன்பிஎல் பள்ளியில் நடந்தது.*

முகாமை டிஎன்பிஎல் செயல் இயக்குனர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (வனத்தோட்டம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி துறை) சீனிவாசன், பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன், முதுநிலை மேலாளர் சிவக்குமார், மேலாளர் வெங்கடேசன், மருத்துவ அலுவலர் ராஜா மற்றும் மருத்துவக் குழுவினர் துவக்கி வைத்தனர். கண் தொடர்பான நோய்களுக்கு பரிசோதனை செய்து மருத்துவ ஆலோசனை வழங்கினர். கிட்டப்பார்வை, துாரப்பார்வை, வெள்ளெழுத்து பாதிப்பு உடைய 310 பேருக்கு டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் ரூ.ஒரு லட்சத்து 25 ஆயிரம் மதிப்புள்ள மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

கண்புரை உள்ள 64 பேர் அறுவை சிகிச்சைக்காக மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு அறுவை சிகிச்சை, உள்விழி லென்ஸ் அறுவை சிகிச்சை, மருந்து, தங்கும் இடம், உணவு ஆகியவற்றை மருத்துவ மனையும், அவர்களுக்கு ரூ.20 ஆயிரம் மதிப்புள்ள பெட்சீட், பேஸ்ட், சோப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை டிஎன்பிஎல் நிறுவனமும் இலவசமாக வழங்கியது.